

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மே 4, 2017 | புரட்சி 16 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00


## கல்வி உரிமை மாநிலப் பட்டியலுக்கு மாற வேண்டும்.

# பெரியார் பெற்றுத் தந்த உரிமைகளை நாம் இழந்துவிடக் கூடாது

## நீதிபதி அரி பரந்தாமன் மருத்துவர்களிடையே முழக்கம்!


தமிழ்நாட்டில் அரசுத் துறையில் ஆரம்ப சுகாதார மய்யங்களில் மருத்துவர்களாக பணிபுரிந்து வருவோருக்கு பணியில் இருக்கும்போதே உயர் பட்டப்படிப்புக்கு 25 சதவீத இடங்களை ஒதுக்கும் கோட்டா முறையை அகில இந்திய மருத்துவ கவுன்சிலின் பரிந்துரையின் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம் நீக்கியிருக்கிறது.; இந்த கோட்டா முறை நீக்கப்பட்டால் கிராமங்களில் பணிபுரிய மருத்துவர்கள் வரும் வாய்ப்புகள் குறைந்து விடுவதோடு, அரசு மருத்துவக் கல்லூரிகளில் உயர் பட்டப்படிப்பு படித்த மருத்துவர்களின் சேவையும் கடும் பாதிப்புக்குள்ளாகிவிடும். எனவே மருத்துவ சேவையின் சமூக நீதியை குழிதோண்டி புதைக்கும் இந்த ஆபத்தை நீக்கிட அவசர சட்டம் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி, தமிழகம் முழுதும் அரசு மருத்துவர்கள் போராடி வருகிறார்கள். சென்னை மருத்துவக் கல்வி இயக்குனர் வளாகத்தில் 8 நாட்களாக நடைபெற்று வரும் போராட்டத்தில் ஏப்.26 அன்று கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று மருத்துவர் களிடையே பேசினார். அவர் தனது உரையில் குறிப்பிட்டதாவது:

மருத்துவ சேவையில் இந்தியாவுக்கே முன்னோடியாக திகழ்வது தமிழகம். இங்கேதான் குறைந்தது 90 சதவீத மாணவர்கள், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட பிரிவிலிருந்து படித்து வரு கிறார்கள். சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவிலிருந்து மருத்துவர்கள் வருவதால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ சேவையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. வடமாநிலங்களில் இடஒதுக்கீடு எண்ணிக்கை மிகவும் குறைவு. பார்ப்பன உயர் ஜாதிக்காரர்கள்தான் அதிக எண்ணிக்கையில் மருத்துவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிராமத்திலிருந்து சிகிச்சைக்கு வரும் ஏழை எளிய மக்களை ஜாதியக் கண்ணோட்டத்திலேயே அலட்சியப்படுத்தும் மனநிலையோடுதான் அங்கே மருத்துவ சேவை நடக்கிறது.

தமிழ்நாட்டில் மருத்துவம் படிக்க வேண்டு மானால் கட்டாயம் சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. அதாவது பார்ப்பனர்கள் மட்டுமே மருத்துவத் துறையில் படிக்க வேண்டும் என்பதற்காகவே இப்படி ஒரு நிபந்தனையை பார்ப்பனர்கள் உருவாக்கி இருந்தார்கள். நீதிக் கட்சியில் பனகல் அரசர் முதல்வராக இருந்தபோதுதான் இந்த முறையை நீக்கினார். பனகல் அரசர் சமஸ்கிருதம் படித்தவர். சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையில் மனநலம் பாதிக்கப்பட்ட பார்ப்பனர்களுக்கு தனிப் பிரிவு ஒதுக்கப்பட்டிருந்தது. ஏனைய 'மனநலம்' பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து அவர்கள் ஒன்றாக கலக்கக் கூடாது என்று தனித்து வைக்கப்பட் டிருந்தனர். இந்த அவலங்கள் சமூக நீதிக் கொள்கையால்தான் மாறியது.

இந்தியா முழுமைக்கும் ஒற்றைக் கலாச்சாரம் - ஒற்றைப் பண்பாடு - ஒற்றைத் தேசம் என்ற நிலை நோக்கி, பா.ஜ.க. ஆட்சி நாட்டை இழுத்துச் செல்ல முயற்சிக்கிறது. தமிழகத்தின் தனித்துவமான சமூகநீதிக் கொள்கைகள் இதற்கு தடையாக இருப்பதால் கல்வி உரிமைகளில் சமூக நீதியை பல்வேறு சட்டங்கள் வழியாக பறித்துக் கொண்டே வருகிறார்கள். இங்கே தீவிரமாக 'இந்துத்துவம்' பேசும் பார்ப்பனரல்லாதவர்கூட சமூக நீதிக் கொள்கையை 'இந்துத்துவா' கொள்கைக்காக பலி கொடுக்க மாட்டார். தமிழ்நாட்டின் இந்த உளவியலை பா.ஜ.க. புரிந்து கொள்ள மறுக்கிறது.

இங்கே நடக்கும் மருத்துவர் போராட்டத்தின் கோரிக்கை, மருத்துவர்களின் நலன் என்பதையும்



தாண்டி மக்களின் வாழ்வியலோடு இணைந்து நிற்கிறது. கிராம மக்களுக்கு மருத்துவ சேவை என்பது அந்த மக்களின் வாழ்வுரிமையோடு பிணைந்து நிற்கிறது. சமூகநீதி என்ற கோட்பாட்டை ஏதோ படிப்பு, வேலைவாய்ப்பு என்ற எல்லைகளோடு சுருக்கி விட முடியாது. சமத்துவம், வாழ்வுரிமை, சுகாதாரம், கல்வி, பெண்ணுரிமை என்று பல்வேறு அம்சங்களையும் சமூகநீதி இணைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் கல்வியும், சமூக நீதியும் அது சார்ந்த பண்பாடுகளும் தனித்துவமானது. எனவே தமிழகக் கல்விப் பிரச்சினைகளில் மத்திய அரசின் தலையீட்டைத் தடுத்து மீண்டும் கல்வி உரிமையை மாநிலப் பட்டியலுக்கே கொண்டு வரவேண்டும். போராடும் உங்களின் கோரிக்கைகளை மக்களிடம் கொண்டு செல்வதில் எங்கள் இயக்கம் துணையாக நிற்கும்" என்று குறிப்பிட்டார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை நிலைய செயலாளர் த ப சி குமரன், சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி மற்றும் தோழர்கள் உடன் வந்திருந்தனர். நிகழ்வில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன் பங்கேற்றுப் பேசினார். அவர் தனது உரையில் குறிப்பிட்டதாவது:

"போராடும் மருத்துவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன். கல்வி உரிமையில் தொடர்ந்து இந்திய அரசு குறுக்கிட்டு வருகிறது. இதற்கு அடிப்படையான காரணம் கல்வி உரிமை. மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு கொண்டு செல்லப்பட்டதுதான். 1976ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலை அமுலில் இருந்தபோது, அன்றைய காங்கிரஸ் ஆட்சி இதை செய்தது. அரசியல் சட்டத்தில் மாநில அதிகாரப் பட்டியல், மத்திய அரசு அதிகாரப் பட்டியல், பொதுப் பட்டியல் என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன.

இரண்டு அரசுகளுக்கும் பொதுவாக வைக்கப்பட்டுள்ள மருத்துவப் பட்டியலின் கீழ் மாநில அரசு ஒரு சட்டம் இயற்றினால் அதற்கு மத்திய அரசின் அங்கீகாரம் பெற வேண்டும். அதே நேரத்தில் மத்திய அரசு தானாகவே சட்டம் இயற்றி, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்துக் கொள்ளலாம். முதலில் இப்போது நாம் போராட வேண்டிய அடிப்படையான கோரிக்கை, மீண்டும் கல்வி உரிமையை மாநில அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வரவேண்டும் என்பதாகவே இருக்க வேண்டும். இந்தியாவில் சமூக நீதிக்கு வழிகாட்டக் கூடிய மாநிலம் தமிழ்நாடு. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற பெயரில் தமிழகத்தில் நடைமுறையிலிருந்த அனைத்துப் பிரிவினருக்குமான சம பங்கீட்டு முறையை 1951ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் நீக்கம் செய்தது. உச்சநீதிமன்றம் இதை உறுதி செய்தது. இதை எதிர்த்து பெரியார் நடத்திய போராட்டத்தினால்தான் அரசியல் சட்டம் முதன்முதலாக திருத்தப்பட்டு, 'கல்வி சமூக நீதியாக' பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு உரிமை கிடைத்தது. அப்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தால் தனது மருத்துவக் கல்வியில் சேரும் கல்வி உரிமை பறிக்கப்பட்டுவிட்டது என்று வழக்கு தொடர்ந்த மனுதாரர் செண்பகம் துரைசாமி, ஆனால் மருத்துவக் கல்லூரிக்கு அவர் இடம் கேட்டு மனுவே போடவில்லை என்ற உண்மை உச்சநீதிமன்ற விசாரணையில் வெளி வந்தது. மனுவே போடாத ஒருவர், தனது உரிமை மறுக்கப்பட்டுவிட்டதாக வழக்கு தொடர்ந்து, தனக்கு சாதகமான ஒரு தீர்ப்பையும் பெற்றுக் கொண்ட நிலை அன்று நிலவியது. அந்த சமூகச் சூழலில்தான் பெரியாரின் சமூக நீதிக்கான போராட்டம் நடந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(4ஆம் பக்கம்)

## அரசு மருத்துவர்கள் போராடுவது ஏன்?

தமிழகத்தில் தற்போது 1800 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 330 அரசு மருத்துவமனைகள், 19 அரசு மருத்துவ கல்லூரிகள், 50க்கும் மேற்பட்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் போன்ற மருத்துவத் துறைகளில் சுமார் 16000க்கும் மேற்பட்ட அரசு மருத்துவர்கள் சேவை செய்து வருகின்றனர். இதில் சுமார் 9000 மருத்துவர்கள் இளநிலை படிப்பு (எம்.பி.பி.எஸ்.) மட்டுமே முடித்துவிட்டு ஏழை எளிய மக்களுக்கு சேவை புரிந்து வருகின்றார்கள். இத்தகைய சிறப்பான பணியினாலேயே அனைத்து சுகாதார குறியீடுகளிலும் இந்தியாவில் தமிழகம் முன்னிலையில் இருந்த வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 1500 முதுநிலை மருத்துவ இடங்கள் உள்ளன. இவற்றில் அனைத்திந்திய கலந்தாய்வு மூலம் 50 சதவித இடங்களும், மாநில அரசின் கலந்தாய்வின் மூலம் 50 சதவீத இடங்களும் நிரப்பப்பட்டு வருகிறது. அதாவது இதில் மாநில அரசிடம் உள்ள மருத்துவ முதுநிலை பட்டப் படிப்பின் மொத்த 750 இடங்களில் 50 சதவீத இடங்கள் சிறப்பு சேவை ஒதுக்கீடாக சுமார் 375 இடங்கள் அரசு மருத்துவர்களுக்காக கடந்த 28 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்தது. ஏழை மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார மையங்களில் இரண்டு வருடம் பணி புரிந்த பிறகு தமிழ்நாடு சேவை இடஒதுக்கீட்டின் கீழ் உள்ள மருத்துவ முதுநிலை படிப்பு இடங்களில் 50 சதவீத இட ஒதுக்கீடும், அதிகபட்சமாக 10 மதிப்பெண்கள் சிறப்பு சேவை ஊக்க மதிப்பெண்களாகவும் வழங்கப்பட்டு முதுநிலை மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். இவ்வாறு சிறப்பு இடஒதுக்கீடு வழங்கப்பட்டபோதே மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவத் துறைகளில் மருத்துவர்கள் பற்றாக் குறையுள்ளது.

இந்நிலையில் தற்போது சென்னை உயர்நீதிமன்றம் 50 சதவீத இடஒதுக்கீட்டை ரத்து செய்யும் அளவிற்கு ஓர் தீர்ப்பை வழங்கியுள்ளது. இது அரசு பணியில் உண்மையாக உழைத்த மருத்துவர்களிடையே மனவேதனையையும் அதிருப்தியையும் உருவாக்கியுள்ளது. இவ்வாறு இடஒதுக்கீட்டை இரத்து செய்தால், மருத்துவர்கள் சேவை சலுகைகள் இல்லாத அரசு பணியினை விடுத்து செல்வது மட்டும் அல்லாமல், புதிதாக அரசு பணியில் சேருபவர் எண்ணிக்கையும் குறைய நேரிடும். இதனால் ஏழை எளிய மக்களின் மருத்துவ தேவை பூர்த்தி செய்ய சிறப்பு மருத்துவர்கள் எண்ணிக்கை குறைவதுடன், எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள்கூட இல்லாத நிலை ஏற்படும்.

**தலையங்கம்**

# இராமானுஜர் ஆயிரம் ஆண்டு விழா கொண்டாடுவோரே – பதில் கூறுங்கள்!

பிறப்பால் பார்ப்பனரான வைணவ மதப் பிரிவைச் சார்ந்த இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா இப்போது கொண்டாடப்பட்டு வருகிறது. ஆர்.எஸ்.எஸ். – சங் பரிவாரங்கள் – வைணவப் பார்ப்பனர்கள் – இராமானுஜருக்கு விழா எடுக்கிறார்கள். ஆனால் இராமானுஜர் முன் வைத்த கருத்துகளை இவர்கள் பின்பற்று கிறார்களா?

இராமானுஜர், பாரதியைப் போல் ஒடுக்கப்பட்ட ஜாதியினரும் ‘பூணூல்’ அணிந்து, ‘பிரம்மத்தை’ அடையலாம்; ‘பிராமணர் என்பது பிறப்பால் வருவது அல்ல’ என்று கூறிய ஒரு சீர்திருத்தவாதி. 3 சதவீத பார்ப்பனர்கள், தங்கள் பிறவி மேலாண்மையின் அடையாளமாக அணியும் பூணூலை மற்றவர்களுக்கு அணியச் சொல்வதைவிட பிறவி அகங்காரத்தை வெளிப்படுத்தும் பூணூலை பார்ப்பனர்களே ஏன் கழற்றி வீசக் கூடாது என்பதுதான் பெரியார் இயக்கம் முன் வைத்த கேள்வி. அரிசியில் கல் கலந்துவிட்ட நிலையில் கல்லைப் பொறுக்கி, அரிசியைத் தூய்மைப்படுத்த வேண்டுமே தவிர, அதைச் செய்யாது, அரிசிகளை பொறுக்கிக் கொண்டிருப்பது அறிவுடைமையாகுமா என்று பெரியார் கேட்டார்.

இத்தகைய சிந்தனைகளுக்கு ஆணி வேராக இருப்பது எது? வர்ணாஸ்ரமத்தை நியாயப்படுத்திக் கொண்டே ஜாதிய வேறுபாடுகளை மட்டும் எதிர்க்க வேண்டும் என்ற மனப்போக்குத்தான். இராமானுஜரும் காந்தியும் பாரதியும் இதே சிந்தனை கொண்டவர்களே. உண்மையில் வர்ணாஸ்ரம தர்மத்தில்கூட அந்த சிந்தனை உருக்கொண்ட வேத காலத்தில் நெகிழ்ச்சிப் போக்கு அதில் அடங்கியிருந்தது உண்மைதான். பிராமணனாகவும், சத்திரியனாகவும், வைசியனாகவும், சூத்திரனாகவும் ஒருவரை அடையாளப்படுத்தும் உரிமை அவனுக்கு வேதம் கற்பித்த ‘குரு’வுக்கு இருந்தது. ‘குரு’வுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்த இந்த உரிமை, பிறகு மிகவும் சூழ்ச்சிகரமாக குடும்பத்தின் தலைவனான தந்தைக்கு மாற்றப்பட்டபோது தான், ‘பிராமணனுக்கு’ உரிய ஆச்சார பழக்க வழக்கங்களை மீறியிருந்தாலும், அதற்கான ‘கல்வி’த் தேர்ச்சி பெறாமல் போனாலும் பார்ப்பனத் தந்தைக்கு மகனாகப் பிறந்துவிட்ட அனைவருமே ‘பிராமணன்’ என்ற நிலை உறுதியாக்கப்பட்டுவிட்டது என்று அம்பேத்கர் கூறுகிறார். அந்த ‘பிறவி’ உரிமையை பார்ப்பனர்கள் இப்போதும் விட்டுத்தர தயாராக இல்லை. அதே பார்ப்பன மேலாதிக்கத்தை விட்டு விடாமலேயே இராமானுஜருக்கும் விழா எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இராமானுஜர் பார்ப்பனர் என்றாலும் அவரது சமூக சீர்திருத்தத்தை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

“முக்தியோ சிலர் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனால்
இராமானுசரை ஈன்றதன்றோ!’

– என்று தனது கவிதையால் போற்றினார்.

திருக்கச்சி நம்பி என்ற ‘வைசியரை’ (செட்டியார் ஜாதி) குருவாக ஏற்றார் இராமானுஜர். தனது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்த திருக்கச்சி நம்பியை இராமானுஜரின் துணைவியார் அவமதித்ததை எதிர்த்து சீற்றம் கொண்டார் என்று அவரது வரலாறு கூறுகிறது. “ஜாதி வேறுபாடு சனாதன தர்மத்தின் சாபக்கேடு. “பிறப்பினால் உயர்வு தாழ்வு என்பது பூர்வஜென்ம கர்மபலன்களினால் ஏற்படுகிறது என்பது மிகப் பெரும் கொடுமை” என்ற இராமானுஜரின் கருத்தை அவருக்கு விழா எடுக்கும் பார்ப்பனர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்று கேட்க விரும்புகிறோம். ‘அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழக அரசின் சட்டத்தை எதிர்த்து’ உச்சநீதிமன்றம் போனதே, இந்த வைணவப் பார்ப்பனர்கள் தானே!

சமூக வாழ்வில் வைணவ ஜாதிய அடையாளங்களைப் பேணி, வாழ்ந்து கொண்டு, இராமானுஜருக்கும் விழா எடுக்கிறார்கள். இதுதான் பார்ப்பனர்கள் காலங்காலமாக பின்பற்றும் வரலாற்றுச் சூழ்ச்சி.

‘நமோ நாராயணா’ மந்திரத்தை புரிந்து அறிவதற்காக திருப்பெரும்புதூரிலிருந்து திருக்கோட்டியூரில் இந்த பெரிய நம்பி இருக்குமிடத்தை நோக்கி 18 முறை நடந்தே சென்றார்; 30 நாட்கள் பட்டினி கிடந்தார் என்று இராமானுஜர் வரலாறு கூறுகிறது. அவ்வளவு அலைக்கழிப்புக்குப் பிறகு, நம்பியிடமிருந்து தான் கற்ற மந்திரத்தை திருக்கச்சியூரில் ஒரு திருவிழாவின்போது அந்த ஊர்க்கோயில் கோபுரத்தின் மீது ஏறி நின்று கொண்டு, “நான் அறிந்த மந்திரத்தை அனைத்து ஜாதியினருக்கும் கூறுகிறேன்; இதை அறிந்து எந்த ஜாதியினரும் சொர்க்கம் போகலாம்” என்று கூவியிருக்கிறார்.

“நமது குலத்துக்கு மட்டுமே காப்பாற்றப் படவேண்டிய மந்திர இரகசியத்தை – குருவுக்கு தந்த உறுதியை மீறி, அனைவரிடமும் கூறி விட்டாயே, நீ நரகத்துக்குத்தான் போவாய்” என்ற திருக்கோட்டியூர் நம்பி சாபமிட்டபோது, “நரகம் சென்றாலும் பரவாயில்லை” என்று கூறினாராம் இராமானுஜர். இராமானுஜருக்கு விழா எடுக்கும் சங்பரிவாரங்கள், இராமானுஜரின் இந்த ஜாதி எதிர்ப்பைப் பேசுகிறார்களா? ஏன் பேசவில்லை? என்று கேட்கிறோம்.

‘தீண்டப்படாதவர்களாக’ ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களை ‘திருக்குலத்தார்’ என்று இராமானுஜர் பெயர் சூட்டி பெருமைப்படுத்த முயன்றார், எந்த பார்ப்பனராவது ‘திருக்குலத்தார்’ என்று அங்கீகரித்து வைணவக் கோயிலுக்குள் ‘ஆகம பூஜை’ செய்ய இன்று அனுமதிக் கிறார்களா? ‘நாலாயிர திவ்ய பிரபந்தம்’ என்ற தமிழ் இலக்கியத்தை காஞ்சிபுரம் மணவாள மாமுனிகள் என்ற வைணவ கோயில் சன்னதியில் பாடுவதற்கு இப்போதும் வைணவப் பார்ப்பனர்கள் தடைப்படுத்தியே வருகிறார்கள்.

இராமானுஜர் ஆயிரம் ஆண்டு விழா நடத்தி, அந்த விழாவையும்கூட வேத பார்ப்பனிய மதத்தின் பிரச்சாரமாகவே நடத்துவோரைக் கேட்கிறோம்.

வைணவக் கோயில்களில் இராமானுஜர் காட்டிய வழியில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக கர்ப்பகிரகத்தை திறந்துவிட முன் வருவார்களா? தமிழ் வழிபாட்டை அனுமதிப்பார்களா? விழா எடுக்கும் சங்பரிவாரங்களாவது இதற்கு குரல் கொடுக்க முன் வருமா?

## சங்பரிவாரங்களுக்கு அமெரிக்காவின் ஆணையம் கண்டனம்

இந்தியாவில் இந்தத்துவா சக்திகளால் மத சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல்கள் மேலும் மேலும் மோசமடைந்து வருவதாக அமெரிக்காவின் மத சுதந்திரத்துக்கான ஆணையத்தின் ஆண்டறிக்கை கூறியுள்ளது. ஏப்.26ம் தேதி, 2016ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அமெரிக்காவில் இந்த ஆணையம் வெளியிட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத் உள்ளிட்ட இந்து தேசியவாதக் குழுக்களும் அவர்களின் ஆதரவாளர்களும், மதச் சிறுபான்மையினர் மற்றும் தலித் மக்களுக்கு எதிரான வன்முறை, துன்புறுத்தலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அந்த அறிக்கை கூறுகிறது. 10 மாவட்டங்களில் இது மிகவும் மோசமாக நடந்து வருகிறது. நாட்டின் தேசிய மற்றும் மாநிலங்களின் சட்டங்களும் இந்த வன்முறைக்கு சாதகமான சூழல்களை உருவாக்கி வருகின்றன என்று குற்றம்சாட்டும், அந்த அறிக்கை பசுவதைத் தடைச் சட்டம், மற்றும் மத மாற்றத் தடைச் சட்டம் ஆகியவற்றை சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் மோடி, சகிப்புத் தன்மை, மதச் சுதந்திரம் பற்றி பேசினாலும், ஆளும் கட்சியின் உறுப்பினர்களும் அவர்களோடு நெருக்கமாக இருக்கும் மத தேசியம் பேசும் அமைப்பினரும் மதச் சுதந்திரத்துக்கு எதிராக வன்முறை, கலவரங்களைத் தூண்டி விடுகிறார்கள் என்று அறிக்கை குற்றம்சாட்டுகிறது. காவல்துறையும், நீதித் துறையும் ஒரு சார்பாக செயல்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

## கல்வித்துறை மீது தொடரும் மோடி அரசின் தாக்குதல்

உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிப்படிப்புகளுக்கான நிதி ஒதுக் கீட்டை குறைத்துக்கொண்டே வரும் மோடி அரசு, சமூகப் பாகுபாடு பற்றிய ஆய்வு மையங்களுக்கான நிதியை முற்றிலுமாக நிறுத்தி விடுவதென முடிவெடுத்துள்ளது.

நாட்டின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் சமூகப் பாகுபாடு பற்றிய ஆய்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (யுஜிசி) நிதி அளித்து வருகிறது.

இந்நிலையில் 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிலையங்கள் (2007-2012) மற்றும் 12-ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்ட சமூக பாகுபாடு பற்றிய ஆய்வு மையங்களுக்கான நிதியை நிறுத்தப் போவதாக யுஜிசி தெரிவித்துள்ளது.

13ஆவது திட்டத்தின் மூலம் மீண்டும் இத்திட்டம் நீட்டிக்கப்படும் என பல்கலைக்கழகங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில், மார்ச் 31 முதல் இவற்றுக்கான நிதி நிறுத்தப்படும் என பல்கலைக்கழகங்கள் சில வற்றுக்கு யுஜிசி சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. பெண்கள் மீதான சமூக பாகுபாடு தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் இதர ஆய்வு மையங்கள் செயல்பட்டு வரும் நிலையில், மோடி அரசின் புதிய அறிவிப்பு பல்கலைக் கழகங்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக யுஜிசி துணைச் செயலாளர் சுஷ்மா ராத்தூர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் உத்தரவுப்படி , 12-ஆவது திட்டக் காலம் முடிவடைந்தபின், சமூகப் பாகுபாடு ஆராய்ச்சி நிலையங்களுக்கான நிதியை யுஜிசி இனி மேல் வழங்காது; 12-ஆவது திட்ட காலம் முடிவடைந்த பின்னர் சமூக விலக்கல் மற்றும் உள்ளீடான திட்டங்களுக்கு யுஜிசி எந்த வகையிலும் பொறுப்பேற்காது; இது தொடர்பாக இனி பேசுவதைக்கூட யுஜிசி விரும்பவில்லை’ என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், ‘பல்கலைக்கழக விதிகளுக்கு உட்பட்டு சமூகப் பாகுபாடுபற்றிய ஆராய்ச்சியை மேம்படுத்தாத நிலையங்களுக்கு மட்டுமே நிதி நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது’ என்று யுஜிசியும், மனிதவளத்துறை அமைச்சகமும் கூறுகின்றன.

‘வேத ஆய்வுகள் குறித்த படிப்புகளுக்கு, யுஜிசி நிதி அளிக்கஆரம்பித்தது. அதன் பின்னர், தலித்துக்களின் மேம்பாடு, அம்பேத்கரின் தத்துவம், இட ஒதுக்கீடு போன்றவை தொடர்பான ஆராய்ச்சி படிப்புகளுக்கு நிதிகளை படிப்படியாக யுஜிசி நிறுத்திவிட்டது’ என்கிறார், தில்லி பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் ஆசிரியரும், அம்பேத்கரிய அறிஞருமான சுகுமார்.

மோடி அரசின் புதிய முடிவு காரணமாக மூடப்படும் ஆய்வு மையங்களில், தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் உள்ள சமூகப் பாகுபாடு ஆய்வு மையமும் ஒன்றாகும்.

இந்தத் துறையில் படிக்கும் ஆராய்ச்சி மாணவர்கள் வேறு துறைக்கு மாற்றப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயத்தில் தள்ளப்பட்டு உள்ளனர்.

அம்பேத்கரின் 125-ஆவது பிறந்த நாளை ஒட்டி தலித் மக்கள் நலனுக்காக பல திட்டங்களை செயல்படுத்தப் போவதாக மோடி அறிவித்தார். ஆனால், சமூக பாகுபாடு பற்றிய ஆய்வு மையங்களுக்கான நிதியைக் கூட மோடி அரசு நிறுத்தியுள்ளது.

# வெளியுறவுக் கொள்கைகளை முடிவெடுப்பதில் மாநில அரசுகளுக்கு உரிமை வேண்டாமா?

***இந்தியாவில் வெளியுறவுக் கொள்கைகள், எப்படி, எவரால், எந்தப் பார்வையில் செயல்படுத்தப்படுகின்றன என்ற கேள்விக்கு வெளிப்படையான பதிலோ, விவாதங்களோ கிடையாது. வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் பார்ப்பன அதிகார வர்க்கத்துக்கு பெரும் பங்கு உண்டு. டெல்லி தலைமைச் செயலகத்தில் 'சவுத் பிளாக்' அவ்வளவு சக்தி வாய்ந்தது. பார்ப்பன அதிகார வர்க்கத்தின் ஆளுமையையும் அதிகாரங்களையும் அங்கே பார்க்க முடியும்.***

ஈழத் தமிழர் இனப்படுகொலைக்குள்ளான 2009ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழகமே ஓரணியில் திரண்டு கொதித்து, "இந்திய அரசே ஈழத் தமிழர்களைக் காப்பாற்று" என்று கண்ணீர்விட்டுக் கதறிய ஓலம், டெல்லி பார்ப்பன அதிகாரவர்க்கத்தின் செவிப்பறைகளில் கேட்கவே இல்லை. அன்றைய ஆளும் காங்கிரஸ், சிறிலங்கா அதிகார வர்க்கமும், இந்திய பார்ப்பன அதிகார வர்க்கமும் இனப்படுகொலைகளை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ஒவ்வொரு நாளும் கலந்து பேசி திட்டங்களைத் தீட்டின.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளை தீர்மானிப்பதற்கு முன்பு,

## 'சவுத் பிளாக்' பார்ப்பன அதிகார வர்க்கத்தின் பிடி தளர்த்தப்பட வேண்டும்

அப்பிரச்சினையோடு தொடர்புடைய மாநிலங்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்ற ஒரு நிலை இருந்திருக்குமானால், இப்படி தமிழர்கள் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார்களா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது.

வெளி விவகாரத் துறையில் மாநிலங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதோடு மாநிலங்களின் உரிமைகளை வெளி விவகாரத்துடன் தொடர்புபடுத்தி பறிக்கக்கூடிய அதிகாரத்தையும் சட்டத்தின் 253ஆவது பிரிவு வழங்கியிருக்கிறது. 253ஆவது பிரிவு வழியாக ஏற்கனவே மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் குறுக்கு வழியில் நடுவண் ஆட்சி பறித்துக் கொண்டிருக்கின்றன. சர்வதேச உடன்படிக்கை, சர்வதேச ஒப்பந்தம், சர்வதேச மாநாடுகளில் இந்தியா மேற்கொள்ளும் உடன்படிக்கைகள் அது மாநில அரசுக்குரிய உரிமையாக இருந்தாலும், நடுவண் அரசே அந்த உரிமைகளை பறித்து இந்தியா முழுமைக்கும் தனது அதிகாரத்துக்குள் கொண்டு வர முடியும்.

உதாரணமாக சுகாதாரம், உள்ளாட்சி அமைப்புகள், சமூக நலன் போன்ற மாநிலங்கள் உரிமைகளின் கீழ் வரும் பிரச்சினைகளில் சர்வதேச உடன் பாடுகளை இந்தியா ஏற்படுத்திக் கொண்டால் இப்பிரச்சினைகளில் நாடு முழுமைக்குமான சட்டத்தை நாடாளுமன்றமே இயற்ற முடியும். கடந்த 70 ஆண்டுகளில் இப்படி எவ்வளவோ உரிமைகளில் நடுவண் அரசு தலையிட்டிருக்கிறது. விளையாட்டுத் துறையைக்கூட விட்டு வைக்கவில்லை. வெளியுறவுத் துறை தொடர்பான முடிவுகளை எடுக்கும் உரிமை நடுவண் அரசிடம் மட்டுமே இருப்பதால் வந்த கேடுகள் இவை. குறைந்தபட்சம், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்துகளைக் கேட்க வேண்டும் என்ற நிபந்தனைகூட இல்லாமல், மாநிலங்கள் கொத்தடிமைகளாகவே நடத்தப்பட்டு வருகின்றன.

இராஜீவ் காந்தி, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுடன் 1987இல் ஈழத் தமிழர்களுக்காக ஒரு ஒப்பந்தம் போட்டபோது, தமிழ்நாடு அரசின் கருத்துகளைக் கேட்டாரா? சொல்லப்போனால் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கு அதில் உடன்பாடு இல்லை என்பதை தெரிந்தும் அந்த ஒப்பந்தத்தைப் போட்டார்.

அதே நேரத்தில் கங்கை நதிநீரை பங்களா தேஷ் நாட்டுடன் பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தம் உருவாவதற்கு மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசுவின் உதவி, நடுவண் அரசுக்கு தேவைப்பட்டது. ஜோதிபாசு டாக்காவுக்குச் சென்று நதி நீர்ப் பங்கீடு குறித்து பேச்சு நடத்தி சுமூகமான தீர்வுக்கு வழி வகுத்தார். இப்போது பங்களாதேசுடன் தீஸ்தா நதி நீர் பங்கீட்டில் மோடி ஆட்சிக்கு மம்தா பானர்ஜியின் கருத்தைப் புறக்கணிக்க முடியாத நிலையை மம்தா உருவாக்கியிருக்கிறார். மாநிலங்களுக்குள் நதிகள் ஓடுவதால் மாநில அரசுகளின் ஒப்புதலைப் பெற வேண்டிய கட்டாயத்துக்கு நடுவண் அரசு தள்ளப்படுகிறது. அதே நேரத்தில் காவிரி நீர் உரிமையில் காங்கிரஸ் ஆட்சியானாலும் பா.ஜ.க. ஆட்சியானாலும் நேர்மையான அணுகுமுறையைப் பின்பற்றாமல் தொடர்ந்து தமிழகத்துக்குத் துரோகமிழைத்து வருகின்றன.

இப்போது பஞ்சாப் மாநிலத்துக்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அமரிந்தர்சிங் மீண்டும் முதல்வராகியுள்ளார். காமன்வெல்த் நாடுகளுக்கு பஞ்சாபிலிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தை மேம்படுத்த திட்டமிட்டு வருகிறார். இதற்கு பஞ்சாபிலிருந்து பாகிஸ்தான் தரை மார்க்கமாக பொருள்களைக் கொண்டு செல்ல பாகிஸ்தான் அரசோடு இந்தியா பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று வற்புறுத்துகிறார். ஏற்கனவே இவர் முதல்வராக இருந்தபோது பாகிஸ்தான் அரசோடு வர்த்தக ரீதியாக நல்ல உறவைக் கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தியாவின் பிரதமர்களால் ஏற்படுத்த முடியாத நல்லுறவை மாநில முதல்வர்களால் உருவாக்கிக் கொள்ள முடிகிறது என்பதற்கு இவையெல்லாம் உதாரணங்கள். ஆனால், இந்த உண்மைகளை 'சவுத் பிளாக்'கில் உள்ள பார்ப்பன அதிகார வர்க்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ள தயாராக இல்லை. தனது சொந்த விருப்பு வெறுப்புகளை சர்வதேச கொள்கைகளாக உருவாக்குகின்றன.

இது தொடர்பாக ஒரு வரலாற்றுச் செய்தியை சுட்டிக்காட்ட வேண்டும்.

1948ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம், அய்தராபாத் நிசாமுடன் ஒரு உடன்பாடு செய்து கொண்டது. அதன்படி "நிசாம், அண்டை நாடுகளுடன் நேரடியாக, வர்த்தக உறவுகளை, சமஸ்தானத்தின் பொருளாதார மேம்பாட்டுக்காக ஏற்படுத்திக் கொள்ள

## அய்தராபாத் நிசாமுக்கு வழங்கப்பட்டது வெளியுறவுத் துறை அதிகாரம்

முடியும். மத்திய அரசு கண்காணிப்பு மற்றும் நெருக்கமான ஒத்துழைப்புடன் இதை மேற்கொள்ளலாம் என்று அந்த உடன்படிக்கை கூறியது. 1948இல் அய்தராபாத் நிசாமுக்கு, இது சாத்தியமாகியபோது, இப்போது மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு மட்டும் வெளியுறவுத் துறையில் பங்கெடுக்கும் உரிமைகள், ஏன் சாத்தியமாகாது" என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது!

இதற்காக அரசியல் சட்டங்களைத் திருத்த வேண்டிய தேவையும் இல்லை. வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான முடிவுகளை சம்பந்தப்பட்டுள்ள மாநிலங்களுடன் கலந்து ஆலோசித்து, அதனடிப்படையில் ஒரு கொள்கை ஆவணத்தை உருவாக்கி, அந்த ஆவணத்துக்கு நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற நடைமுறையை உருவாக்கலாம். சட்டத்தையே திருத்த வேண்டியிருந்தாலும் அதைச் செய்தாக வேண்டும்.

1976ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த ஜான்கெர் (Sir John Kerr), பிரதமராக இருந்த கவ் வில்தம் (Gough Whiltam) என்பவரை பதவி நீக்கம் செய்தார். இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் அரசியல் சட்டம் தொடர்பான விவாதங்கள் தலைதூக்கின. பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசியல் சட்ட விவாதங்கள் நடந்தன.

இறுதியாக 1996ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் வெளி விவகாரத் துறை அமைச்சர் அலெக்சாண்டர் டவ்னர் (Alexander Downer) அறிக்கை சமர்ப்பித்தார். அதன்படி வெளிநாட்டு உடன்பாடுகள் ஒப்பந்தங்களை ஆஸ்திரேலியா மேற்கொண்டால் மாநில அரசுகளை கலந்து ஆலோசித்து நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வைத்து ஒப்புதலைப் பெற வேண்டும். அதுவும் இந்தியாவில் மோடி ஆட்சி நிறைவேற்றிய நிதி மசோதாவைப் போல் கடைசி நாளில் சமர்ப்பித்து அவசர அவசரமாக விவாதங்களின்றி நிறைவேற்றிடாமல், நாடாளுமன்றக் கூட்டம் நிறைவடைவதற்கு குறைந்தது 15 நாட்களுக்கு முன் சமர்ப்பித்து விவாதிக்க வேண்டும் என்று ஆஸ்திரேலியா முடிவு செய்தது.

ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டுக் கொள்கை சர்வதேச உடன்படிக்கைகள், சர்வதேச ஒப்பந்தங்கள், அனைத்தும் மாநில அரசுகளுடன் கலந்து பேசிய பிறகு முடிவெடுக்கப்படும் நிலை இப்போதும் தொடர்கிறது. கூட்டாட்சி தத்துவம் உண்மையாக செயல்படுவதற்கு வெளி நாட்டுக் கொள்கை முடிவுகளில் தொடர்புடைய மாநிலங்களின் கருத்துகளை ஏன் புறக்கணிக்க வேண்டும்? இதற்கான குரலை இனியாவது தமிழர்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும்!

**– விடுதலை இராசேந்திரன்**

**தகவலுக்கு ஆதாரம்: ஏ.ஜி. நூரானி, டெக்கான் கிரானிக்கல் ஏட்டில் எழுதிய கட்டுரை, மார்ச் 19, 2017**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பத்ரிநாராயணன் 13ஆவது நினைவு நாள்





திராவிடர் விடுதலை கழகத்தின் கழக செயல் வீரர் பத்ரி நாராயணன் 13 ஆம் ஆண்டு நினைவு நாள் 30.4.17 அன்று மிகுந்த எழுச்சியுடன் நடந்தது. அவரது நினைவிடத்தில் கழகத் தோழர்கள், காலை 9 மணி யளவில் மலர்வளையம் வைத்து உறுதி மொழி ஏற்று வீரவணக்கம் செலுத்தினர்.

தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர், ஆசிரியர் திருப்பூர் சிவகாமி நிகழ்வில் பங்கேற்றார். தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன் வீரவணக்க முழக்கங் களை எழுப்பி உரையாற்றினார். தந்தை பெரியார் திராவிடர் கழகம் அண்ணா மலை, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த ரூதர். கார்த்திக், குமரப்பா , தி.மு.க. ஆர்.என். துரை ஆகியோர் பத்ரியின் கொள்கை உறுதியை நினைவுகூர்ந்து உரையாற்றினர். இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் பத்ரி நாராயணன் புகைப்படத்திற்கு தலைமை கழகச் செயலாளர் தபசி குமரன் மாலை அணிவித்தார். பகுதி முழுதும் ஏராளமான கழகக் கொடிகளை தோழர்கள் கட்டி யிருந்தனர். மாவட்ட செயலாளர் உமாபதி நிகழ்வுகளை ஒருங்கிணைத் தார். பெரும் எண்ணிக்கையில் தோழர்கள் திரண்டிருந்தனர்.


நினைவு நாளையொட்டி 'குழந்தைகள் பழகு முகாம்' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இப்போது மத்திய கல்வித் திட்டமான 'சி.பி.எஸ்.ஈ.' பாடத் திட்டத்தின்கீழ் 'நீட்' எனும் நுழைவுத் தேர்வு முறையை நாடு முழுதும் மத்திய அரசு திணித்திருக்கிறது. தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மாணவர்கள், மாநில அரசு பாடத் திட்டத்தின்கீழ் படிப்பவர்கள். இவர்கள் எப்படி 'சி.பி.எஸ்.ஈ.' பாடத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் நுழைவுத் தேர்வை எழுத முடியும்? இது கொடுமையானது அல்லவா? இவையெல்லாம் எதனால் நடக்கிறது? கல்வி உரிமை - மாநிலப் பட்டியலிலிருந்து பறிக்கப்பட்டு, பொதுப் பட்டியலுக்கு கொண்டு செல்லப்பட்டதால்தான்.

மருத்துவப் படிப்பில் அகில இந்திய ஒதுக்கீடு என்ற முறையையே ஒழிக்கப்பட வேண்டும். எதற்கு அகில இந்திய கோட்டா என்று ஒன்று இருக்க வேண்டும். தமிழ்நாடு மருத்துவ பட்டப் படிப்புக்கான மொத்த இடங்களில் 15 சதவீதம் அகில இந்திய 'கோட்டாவாக' எடுத்துக் கொள்ளப்படுகிது. மருத்துவ முதுநிலைப் பட்டப் படிப்புக்கான இடங்களில் 50 சதவீத இடங்களை 'அகில இந்திய கோட்டா'வாக மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. நமது தமிழ்நாடு அரசு நமது மக்கள் வரிப்பணத்தில் நாம் உருவாக்கி செயல்படுத்தும் மருத்துவக் கல்லூரிகளில் எதற்கு 'அகில இந்திய கோட்டா'க்கள் நுழைய வேண்டும்? நமக்கு அகில இந்திய கோட்டாவே வேண்டாம்; அதுபோல் பிற மாநிலங்களுக்குப் போய் நமது மாணவர்கள் படிக்கவும் வேண்டாம். நமக்கு அந்த இடங்கள் வேண்டாம்; தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் அனைத்து இடங்களிலும் தமிழக மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும். இந்த உரிமைக் குரலை ஒலிப்பதற்கு இப்போது நம்மிடம் பெரியார் இல்லை. அவர் போராடி பெற்றுத் தந்த இடஒதுக்கீட்டின் பலனைத்தான் நமது மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இனி உங்களிடமிருந்தே பெரியார்கள் வரவேண்டும். தமிழ்நாட்டுக்கு பல பெரியார்கள் இன்று தேவைப்படுகிறார்கள். பெரியார்களாக பலர் வெளியே வந்து போராட வேண்டும்'' என்று நீதிபதி அரிபரந்தாமன் தனது உரையில் குறிப்பிட்டார்.

# வில்வித்தைப் போட்டியில் கழகக் குடும்பத்தின் குழந்தைகள் வென்றனர்



சேலம் மாவட்டம் கொளத்தூர் கழக குடும்பத்தை சார்ந்த கொளத்தூர் குமார் - தமிழரசி ஆகியோரது மகன் இனியன், காவலாண்டியூர் விஜயகுமார் - கலைச்செல்வி ஆகியோரது மகன் வளவன், காவை இளவரசன் - மாதவி ஆகியோரது மகன் எழிலரசு ஆகியோர் 23.4.17 ஞாயிறு அன்று நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் ஸ்போர்ட்ஸ் பவுண்டேசன், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடத்திய மாநில அளவிலான வில் வித்தை போட்டியில் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான கம்போண்ட் பிரிவில் பங்கேற்றனர். இனியன் தங்கபதக்கம் பெற்றார். 10 வயதிற்கு உட்பட்டோருக்கான கம்போண்ட் பிரிவில் வளவன் தங்க பதக்கம் பெற்றார். 10 வயதிற்கு உட்பட்டோருக்கான இந்தியன் பிரிவில் எழிலரசு வெள்ளி பதக்கம் பெற்றார். இதற்கான சான்றிதழையும், பதக்கத்தையும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அதிகாரி புண்ணியமூர்த்தி வழங்கினார். வெற்றி பெற்ற வீரர்களுக்கு கழகத் தலைவர் பாராட்டுகளை தெரிவித்து குழந்தைகளுக்கு உற்சாகமூட்டினார்.

## பெங்களூரில் "குழந்தைகள் சிறப்பு பழகு முகாம்" தேதி, இடம் மாற்றம்

தமிழ்நாடு அறிவியல் மன்றம் நடத்தும் குழந்தைகள் பழகு முகாம் : **நாள் : 13.5.2017 முதல் 17.5.2017 (5 நாள்கள்) இடம் : பெங்களூர் அய்.எஸ்.அய். அரங்கம்.**

கற்பனைத் திறன் வளர்த்தல், படைப்பாற்றல், குழு உரையாடல், கதை உருவாக்கல், ஓவியப் பயிற்சி, கவிதை, கட்டுரை புனைதல், அறிவியல் விளையாட்டுகள் உள்ளிட்ட நிகழ்வுகள்.

10 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் பங்கேற்கலாம். குறைந்த பட்ச பங்களிப்பு : குழந்தை 1-க்கு : ரூ.1500/- ரூ.1500/ செலுத்த இயலாதவர்கள் ரூ.1000/- செலுத்தலாம்.

முன் பதிவு அவசியம். பதிவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண் : **98424 48175** - ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்)

## திராவிடர் விடுதலைக் கழகத்தின் வெளியீடுகள்

1. மனு நீதி : ஒரு குலத்துக்கொரு நீதி- பெரியார், விலை-ரூ.10.
2. தனியார் துறையில் இடஒதுக்கீடு ஏன்? எதற்கு?-விடுதலை இராசேந்திரன் விலை-ரூ.30.
3. இந்து மதப் பண்டிகைகள்-பெரியார். விலை-ரூ.30.
4. கடவுளர் கதைகள்- சாமி. விலை-ரூ.20.
5. இளைஞர்களே உங்களுக்குத் தெரியுமா? விலை-ரூ.20.
6. உயர் எண்ணங்கள்-பெரியார். விலை-ரூ.30.
7. பெரியாருக்கு எதிரான முனைமழுங்கும் வாதங்கள்-கொளத்தூர் மணி. விலை-ரூ.50.
8. இவர்தான் பெரியார்-தஞ்சை மருதவாணன். விலை-ரூ.20.
9. திராவிட இயக்க வரலாற்றுச் சுவடுகள்-தஞ்சை மருதவாணன். விலை-ரூ.30
10. ஈழம் முதல் அணுஉலை வரை-கொளத்தூர் மணி. விலை-ரூ.30
11. பண்பாடு-சமூகம்-அரசியலில் 'மனு'வின் ஆதிக்கம்- விடுதலை இராசேந்திரன், விலை-ரூ.10
12. 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஜாதி ஒழிப்பு மலர். விலை-ரூ.100
13. பேய், பில்லி-சூன்யம், பொய். விலை - ரூ.30.
14. 'சமஸ்கிருத' படையெடுப்பு. விலை - ரூ.30.
15. விஞ்ஞானிகளை அழித்த மதவெறி. விலை - ரூ.30.
16. வளர்ந்தது விஞ்ஞானம்; வீழ்ந்தன மூடநம்பிக்கைகள். செங்குட்டுவன்-விலை-ரூ.20.
17. வரலாற்றில் பார்ப்பனிய வன்முறைகள்-அப்துல் சமது உரை- விலை-ரூ.10.

தொடர்புக்கு: **தலைமைக் கழகம்,** திராவிடர் விடுதலைக் கழகம்
95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம். மயிலாப்பூர், சென்னை-600004.
பேசி : 044-24980745 - 9941613535 / 9941759641

"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் **ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th May 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN